கூட்ட எண் 12 நகராட்சி அலுவலகம்,
2019 - 2020 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 31.03.2020

2020-ம் ஆண்டு மார்ச் மாதம் 31.03.2020-ந்தேதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் மார்ச் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியின் 2020 - 2021 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டினை மன்றத்தின் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் நகர மன்ற முன் அனுமதிக்கு ஒப்புதல் அளிக்கலாம். அலுவலக குறிப்பு :-1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் : 441/பி1/2020 )

4.ஆரணி நகராட்சியில் வார்டு எண் 32-ல் காந்தி ரோடு இணைப்பில் மற்றும் கலாஸ்கார தெரு மற்றும் மோகனன் தெருவில் உள்ள சிறுபாலம் உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது. இதனால் அப்பகுதி தெரு மக்கள் சென்று வருவதற்கு சிரமமாக உள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி பழுதடைந்துள்ள சிறுபாலங்களை பராமரித்து ரிப்பேர் சரி செய்ய மதிப்பீடு ரூ. 1.60/- லட்சம் செலவு ஆகும். இப்பணிகள் மிகவும் அவசரம் அவசியம் எனவே, நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வேலைகள் செய்ய நகர மன்ற பொருளுக்கும், அனுமதிக்கும்.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண் : /2019/இ1)

5.ஆரணி நகராட்சியில் வார்டு எண் 6-ல் நகராட்சிக்கு சொந்தமான நடுநிலை பள்ளி சார்பனா மேட்டடில் நடுநிலை பள்ளி இயங்கி வருகிறது. இந்த பள்ளியில் ஆண்கள் மாணவர்கள் பயன்படுத்தும் கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டிடம் பழுதடைந்துள்ளது. பள்ளி கட்டிடத்தின் கான்கிரிட் தளம் மழை காலங்களில் மழைநீர் கட்டிடத்தின் உட்புறமாக வருவதால் கான்கிரிட் தளம் ரிப்பேர் சரி செய்யலாம், மேலும் பள்ளியின் சுற்று சுவர் உயர்த்தி தர வேண்டியும், கட்டிடத்தில் வண்ணப்பூச்சு வேலைகள், கதவுகளில் வண்ணப்பூச்சு வேலைகள் செய்ய, கட்டிடம் ரிப்பேர் சரி செய்ய தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்தை, 2019-2020 கல்வி நிதியில் இருந்து செலவு செய்ய நகர மன்ற பொருளுக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண் : /2019/இ1)

6. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி 2019-2020-ன் ஆண்டிற்கான பின்வரும் பணிகள் மேற்கொள்ள அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி** | | | | |
| 1 | ஆரணி நகராட்சி வார்டு எண் 1 KK நகரில் சிறுபாலம் அமைத்தல் | 0.60 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.13% குறைவு<br>0.30% அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சி வார்டு எண் 4 மோகனன் தெருவில் நகரில் சிறுபாலம் அமைத்தல் | 0.65 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.10%குறைவு<br>0.25%அதிகம் |
| 3 | ஆரணி நகராட்சி வார்டு எண் 32-ல் காந்தி ரோடு, கலாஸ்கார தெரு, மற்றும் மோகனன் தெருவில் நகரில் சிறுபாலங்களை பழுது சரி செய்தல் பணி | 1.60 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.09% குறைவு<br>0.18% அதிகம் |
| **குடிநீர் நிதி** | | | | |
| 4 | ஆரணி நகராட்சி பகுதியில் பழுதடைந்த வால்வு தொட்டியை சரி செய்தல் பணி | 5.60 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.10%குறைவு<br>0.20%அதிகம் |
| **கல்வி நிதி** | | | | |
| 5 | ஆரணி நகராட்சி வார்டு 6-ல் சுற்று சுவர் அமைத்தல்,வண்ண பூசுதல் செய்தல் பணி | 3.00 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.19% குறைவு<br>0.32% அதிகம் |

அலுவலக குறிப்பு:-1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2.மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணிஆணை வழங்க மன்றம் அனுமதிகலாம்.

(கோப்புஎண். 765/E1/2020)

7. ஆரணி நகராட்சியில் குடிநீர் நிதி 2019-2020-ன் ஆண்டிற்கான பின்வரும் பணிகள் மேற்கொள்ள 22.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் நிதி** | | | | |
| 1 | ஆரணி நகராட்சி பகுதிகளில் உள்ள சிறுமின்விசை மற்றும் தலைமை நிரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டர்கள் பழுது பார்த்தல் பணி | 3.00 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.05% குறைவு<br>0.39 % அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சி குடிநீர் விநியோக பிரதான குழாய்கள், குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் உடைப்புகள் சரி செய்யும் பணி | 2.00 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.06% குறைவு<br>0.30% அதிகம் |

அலுவலக குறிப்பு :-1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணிஆணை வழங்க மன்றம் அனுமதிகலாம். (கோப்புஎண்.765/E1/2019)

8. இந்நகராட்சியில் Covid -19 தாக்கத்தால் பொதுமக்கள் உயிர் காக்கும் வண்ணம் தற்போது 144 தடை உத்தரவு உள்ளதால், சத்தியமூர்த்தி பகுதியில் JCB மூலம் மழைநீர் வடிகால்வாய்களில் உள்ள கசடுகளை துர்வாரும் பணிகளை, இந்நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.S.உஷாராணி ஆரணி அவர்கள் மூலம் பணியின் அவசர அவசியம் கருதி ரூ.21000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கலாம். ஆணையாளரின் ஒப்புதலுக்கு வைக்கபடுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ்மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண் : 765/2019/இ1)

9. ஆரணி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின்உபகரணங்கள் வரும் ஏப்ரல் 2020 முதல் செப்டம்பர் 2020 வரை ஆறு மாத காலத்திற்கு வாங்கி, நகராட்சி கையிருப்பு வைத்து பயன்படுத்தி கொள்ள ஆகும் தோராயமாக செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தனியார் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம்.(ந.க.எண் :592/2020/இ1)

10. ஆரணி நகராட்சியில் தமிழக அரசின் ஆணைகிணங்க மார்ச் மாதம் 25 முதல் ஏப்ரல் 14ம் தேதி வரை கொரான நோய் தடுப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.சாலை ஓரம் வசிக்கும் மக்கள், ஊனமுற்றவர்கள், வசதி இல்லாதவர்கள் நகராட்சியின் கட்டுபாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் இலவச உணவு வழங்கப்பட்டு வருகிறது. அம்மா உணவகத்தில் குடிநீருக்காக பொருத்தப்பட்ட RO பிளான்ட் இயந்திரம் மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள RO பிளான்ட் இயந்திரம் ஆகியவைகள் பழுது ஏற்ப்பட்டு உள்ளது. மேற்படி அம்மா உணவகத்தில் உள்ள RO பிளான்ட் இயந்திரம் முழுவதுமாக பழுது அடைந்து விட்டபடியால் புதியதாக RO பிளான்ட் இயந்திரமும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள RO பிளான்ட் இயந்திரத்தினை பழுது சரி செய்திடவும் ஆகும் தோராய செலவினம் ரூ.30,000/-ற்கு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம் (கோப்பு எண் 765/2019/இ1)

11. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான TN25V 9461 இலகு ரக வாகனம் குடிநீர் பணிகளுக்காக பயன்பாட்டிலிருந்த வாகனம் தற்போது பழுதடைந்ததால், குடிநீர் விநியோகம், பைப்பு உடைப்பு, வரி வசூல் விளம்பரம் பணிகள் பாதிக்கப்படுகிறது. பழுதடைந்த வாகனம் தனியார் ஒர்க்ஸ் ஷாப் ரிப்பேர் சரிபார்க்க ஆகும் தோராயமாக செலவினம் ரூ.30000.00-ற்கு மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ்மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண் : /2019/இ1)

12. ஆரணி நகராட்சியில் பொதுமக்கள் கூடும் இடங்களில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க நகராட்சியின் சார்பில் பேருந்து நிலையத்தில் கிருமி நாசினி தெளித்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியாளர் வாய்மொழி உத்தரவில் கொரோனா விழிப்புணர்வுக்கு பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் கைகள் கழுவுவதற்கு தேவையான 5 இடங்களில் தண்ணீர் வசதிகள் (Wash Basin) அமைத்து தர ஆகும் தோராயமாக செலவினம் ரூ30000.00 மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ்மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண் : /2019/இ1)

13. ஆரணி நகராட்சியில் வார்டு எண் 01 முதல் 33 வரை உள்ள தெருகளில் குடிநீர் விநியோகம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது. மேலும் நகரில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்புகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. வரும் காலம் கோடை வெப்பம் மற்றும் பருவநிலை மாற்றம் ஏற்படும் போது பூமியில் நீர்மட்டம் குறைய வாய்ப்பு அதிகமாக இருக்கும் பட்சதில் நகரில் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கிட ஆரணி நகராட்சி மூலம் தனியாருக்கு ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு குடிநீர் வழங்கிட ஆகும் தோராயமாக செலவினம் ரூ.10.00 இலட்சத்தில், 2019-2020 water Supply Fund –ல் பணி செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ்மேற்கொள்ள அனுமதிக்கலாம்.(ந.க.எண் : /2019/இ1)

14. ஆரணி நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறை, நகரமன்ற தலைவர் அறை,பொறியாளர் அறை மற்றும் வரிவசூல் மையம் போன்ற பகுதிகளில் 1.50 Ton குளிர் சாதன பெட்டிகள் அமைக்கும் பணி மற்றும் மின்பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :-1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ்மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.765/2019/இ1)

15.ஆரணி நகராட்சியில் தமிழக அரசின் ஆணைகிணங்க மார்ச் மாதம் 25 முதல் ஏப்ரல் 14ம் தேதி வரை கொரான நோய் தடுப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவசர அவசியம் கருதி கொரான நோய் தடுப்பு பணிக்கு லைசால்-5000 லிட்டர்கள், 3 அடுக்கு முககவசம்-5000 எண்ணிக்கைகள்-(ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும்) ப்ளாக் பினாயில் 100-லிட்டர் ஆகியவைகளை பொறியியல் பிரிவின் மூலம் வாங்கிட இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் இருந்து குறிப்பு வழங்கப்பட்டதின் பேரில் மேற்க்குறிப்பிட்ட பொருட்கள் வாங்கிட ஆகும் தோராய செலவினம் ரூ.20.00/-ற்கு(இலட்சத்தில்) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம் (கோப்பு எண் 765/2019/இ1)

16.இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டி கீழ்க்கண்டுள்ள பொருட்களான

| வ.எண் | பாதுகாப்பு உபகரணங்களின் விவரம் | எண்ணிக்கை அளவு |
|---|---|---|
| 1 | கையுறை | 1000 எண்ணிக்கை |
| 2 | முக கவசம் | 1000 எண்ணிக்கை |
| 3 | முழு பாதுகாப்பு உடை | 30 எண்ணிக்கை |
| 4 | இயந்திர தெளிப்பான் | 5 எண்ணிக்கை |
| 5 | சோடியம்ஹைப்போ குளோரைடு கரைசல் | 1000 லிட்டர் |
| 6 | லைசால் | 2000 லிட்டர் |
| 7 | சோப்பு | 500 எண்ணிக்கை |
| 8 | நீர்த்த சுண்ணாம்பு தூள் | 10 டன் |
| 9 | Sanitizer 100ml | 100 எண்ணிக்கை |
| 10 | ஒளிரும் சட்டை | 500 எண்ணிக்கை |
| 11 | டெட்டால் கரைசல் | 200 லிட்டர் |
| 12 | சோப்பு கரைசல் | 200 லிட்டர் |
| 13 | பிளிச்சிங் பவுடர் | 5 டன் |

மேற்கண்டவாறு உள்ள பொருட்களை வாங்க அதற்கான ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம்.2.தனி அலுவலர் முன்அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கல

17.இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளராக பணிபுரியும் எம்.கமலா என்பவர் பணி நீக்க காலத்தை பணிக்கலமாக கேட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் 22367/ 2019 வழங்கப்பட்ட தீர்ப்பின்படி சென்னை அரசு வழக்கறிஞர் திரு.வி.ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களிடம் கருத்து பெறப்பட்டதற்கு கட்டண தொகை ரூ.5000/- வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் : 2053/2019/எச்1)

18.ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 2020 – 2021 ஆண்டுக்கான கொசு ஒழிப்பு பணிக்காக காலை மற்றும் மாலையில் முதிர்வு கொசுக்களை அழிக்க கீழ்க்கண்ண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | Temephos | 50% Extra 50Ltr |
| 2 | Pyretherum | 2% Extra 50Ltr |
| 3 | Penthion | 82.5% Extra 20Ltr |

மேற்கண்டவாறு உள்ள மருந்துகளை வாங்கவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : .1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.2.மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.(கோப்பு எண் : 9410/2007/எச்1)

19.இந்நகரட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் மோட்டார் வாகனங்களுக்கு நகராட்சியில் போதிய ஓட்டுநர் பணியிடங்கள் இல்லாத நிலையில் 2 எண்ணிக்கையிலான ஓட்டுநர் பணியிடம் மட்டுமே உள்ளதால் மீதமுள்ள வாகனங்களை துப்புரவு பணியாளர்களைக் கொண்டு இயக்கப்பட்டு வருகிறது. இதனால் நகரில் துப்புரவு பணியில் தோய்வு ஏற்படுகிறது. அதனால் வாகனங்களை இயக்க முடியாமல் உள்ளது.எனவே மீதம் உள்ள மோட்டார் வாகனங்களை இயக்க ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திகொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலைஅவர்களின் 2019 - 2020ம் ஆண்டிற்கான செயல்முறைகள் ந.க.எண்.F3/17888/2018 நாள்:.07.2019ன் படி நபர் ஒன்றுக்கு தொகை ரூ.500/-வீதம் 11 மோட்டார் வாகனங்களுக்கு 30 நாட்களுக்கு 165000/-வீதம் 1 ஆண்டுக்கு தோராய செலவினம் தொகை ரூ.2007500/-க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு : 1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.2.மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.(கோப்பு எண்.297/2020/எச்1)

20. ஆரணி நகராட்சியில் தமிழக அரசின் ஆணைகிணங்க மார்ச் மாதம் 25 முதல் ஏப்ரல் 14ம் தேதி வரை கொரான நோய் தடுப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவசர அவசியம் கருதி கொரான நோய் தடுப்பு பணிக்கு லைசால்-1000 லிட்டர்கள் வாங்கிட ஆகும் தோராய செலவினம் ரூ.2.70/-ற்கு(இலட்சத்தில்) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம் (கோப்பு எண் 765/2019/இ1)

21.ஆரணி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள மல்லிகை சுய உதவிக் குழு மூலம் 20 தற்காலிக பணியாளர்கள் சப்ளை செய்யவும் மூன்று மதங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்கள் நிர்ணயித்த தினக் கூலி ரூ.370/- என்ற அடிப்படையில் ஆகும் தோராய செலவினம் ரூ.6.88 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம்.2மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.3.அவசர அவசியம் கருதி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள மல்லிகை சுய உதவிக் குழுவிற்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண்: 538/2020/ எச்1)

22. ஆரணி நகராட்சிக்குட்ப்பட்ட சூரிய குளத்திற்கு புணரமைத்தல் பணிகளாக, Aeration முறையில் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்தல்,நடைபாதை,சுற்று சுவர்,வடக்கு பகுதியில் நடைபாதை,கிழக்கு பகுதியில் நடைபாதை,சிறுவர் பூங்காவிற்கான விளையாட்டு உபகரணங்கள், மின் வசதிகள், பில்டர் மீடியா அமைத்தல் போன்ற பணிகளுக்காக,மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 110 -ன் விதியின் கீழ் ரூ.650.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ள அறிவித்துள்ளார். இப்பணிகளுக்கான நில ஆய்வு,மண் பரிசோதனை, பூங்கா அமைப்பதற்கான வரைபடம், மதிப்பீடு தயாரித்தல், Test Report, புகைப்படங்கள் பயன்படுத்தி விரிவான திட்ட மதிப்பீடு (DPR) தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களுக்கு அனுப்பி தலைமை பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டி உள்ளதால், தனியார் மூலம் consultant நியமித்து, இப்பணிகளை செய்து முடிக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ்மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.765/2019/இ1)**

23. ஆரணி நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்ய WATER SUPPLY TANKER LORRY தற்சமயம் பழுதடைந்த நிலையில் உள்ளது. இனிவரும் காலங்களில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் நகரில் குடிநீர் தேவை அதிகரிக்கும் எனவே இந்நகராட்சிக்கு சொந்தமான DUMPER PLACSER LORRY-யில் WATER TANKயை புதியதாக பொருத்தி தரவும் இதற்குண்டான மதிப்பீடு ரூ.7.00 (இலட்சம்) குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள நகர மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ்மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.765/2019/இ1)**

24. ஆரணி நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் 2019 -20 விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அங்கன்வாடி மையங்களை மறுசீர்மைத்தல் பணிகளின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கங்கையம்மன் கோவில் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு, மதிப்பீடு அனுப்பி வைக்குமாறு, திட்ட அலுவலர், மாறுபட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்கள் கோரியுள்ளார்கள்.ஆகவே மேற்கண்ட பணிகளுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்கப்பதற்கு, மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி சமர்பிக்கபடுகிறது. ஆணையாளர் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ்மேற்கொள்ள அனுமதிக்கலாம். **(ந.க.எண்.765/2019/இ1)**

25. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 33 வார்டுகளில் இருக்கும் குடியிருப்புகளில்ஏடிஸ் வகை கொசுக்கள் உற்பத்தியினை தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் முதிர்ந்த கொசுக்களை ஒழிப்பதற்கு புகை மருந்து அடிப்பது முக்கிய பணியாகும்.எனவே தினசரி இரண்டு வேலை புகை மருந்து அடிக்க புதியதாக புகை மருந்து இயந்திரம் Portable Fogging Machine 2 எண்ணிக்கை மற்றும் Handy Fogging Machine 3 எண்ணிக்கையும் தோரய செலவினம் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ்மேற்கொள்ள அனுமதிக்கலாம். **(ந.க.எண்.299/2020/எச்1)**

26.இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் சப்ளை செய்ய 20.03.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | N.R. TRADERS 22A, E.B காலணி, T.V.S Nagar இடையார்பளையம், கோயம்புத்தூர் – 25 | Portable Fogging Machine ஒன்றின் விலை - 1,08,560/- |
| | | Handy Fogging Machine ஒன்றின் விலை - 27,140/- |
| 2 | அமுதா ஏஜென்சீஸ் 2 /342, கரும்பாபாளையம் M.G.புதூர்(அ) சூலூர் கோயம்புத்தூர் – 641406 | Portable Fogging Machine ஒன்றின் விலை - 1,13,280/- |
| | | Handy Fogging Machine ஒன்றின் விலை - 28,320/- |

**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2.குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள N.R.TRADERS நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.3.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.**(கோப்பு.எண்.299/2020/எச்1)**

27. இந்நகராட்சி பகுதியில் உள்ள கார்த்திகேயன் ரோட்டில் திருமதி.மு.ஜெயந்தி,ந.முரளி என்பவர் பெயரில் உள்ள சொத்துவரி சமந்தமாக மாவட்ட முன்கிப் கோட்டில் தொடர்ந்த வழக்கில் டிகிரி காபி பெற்று தந்தமைக்கு நீதி மன்ற கட்டணம் மற்றும் வழக்கறிஞர் கட்டணம், 10 வழக்கறிஞர்களுக்கு ரூ.40,000/- எழுத்தால் ரூபாய்.நாற்பதாயிரம் மட்டும் வழங்க நகரமன்ற வழக்கறிஞர் திரு.V. வெங்கடேசன் B.Com LLM அவர்கள் பட்டியல் வழங்கியுள்ளார். வழக்கு எண்கள் : AS,No.35/2015,36/2015,52/2015,2/2015,12/2016,46/2015,51/2015,6/2015,57/2015 மற்றும் 9/2016 ஆகிய வழக்குகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளத்தால் தனி அலுவலர் / ஆணையாளரின் முன்அனுமதி பெற்று மேற்படி கட்டணம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதி கோரப்படுகிறது.

அலுவக குறிப்பு : வழக்கு மற்றும் நீதிமன்ற கட்டணம் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் : 1756/அ1/2020)

28. ஆரணி நகராட்சியில் தமிழக அரசின் ஆணைகிணங்க மார்ச் மாதம் 25 முதல் ஏப்ரல் 14ம் தேதி வரை கொரான நோய் தடுப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களாலும் முன் எச்சரிக்கை நடவடிக்கை தொடர்பன ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு ஏப்ரல்-14 தேதி வரை ஆரணி காந்தி ரோட்டில் இயங்கி வரும் காய்கனி அங்காடியினை தற்காலிகமாக கோட்டை மைதானத்தில் அமைதிடுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேற்படி இடத்தில் 73 கடைகள், மைதானத்தில் வெளியே வாகனங்கள் நிறுத்த மார்க்கிங் லைன் மற்றும் JCB இயந்திரம் கொண்டு கோட்டை மைதானத்தின் உள்புறமும் வெளிபுறமும் இடத்தினை சமன் படுத்தி பொது மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வர மேற்படி பணிகளை கொரான நோய் தடுப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கையில் வேலை செய்ய நகராட்சி பதிவு ஒப்பந்ததாரர் E.இளங்கோவன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி மேற்படி பணிகள் செய்திட ஆகும் தோராய செலவினம் ரூ.74000/-ற்கு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம் (கோப்பு எண் 765/2019/இ1)

29.இந்நகராட்சியின் 21.03.2019 கணினி பிரிவு, பொது பிரிவு,பொறியில் பிரிவு,பொது சுகாதார பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு பயன்படுத்தப்படும் Canon 328 image Class Toner முழுவதும் தீர்ந்துவிட்டதால் அதற்குண்டான HP 328 Toner 20 எண்ணிக்கையும், Canon LBP 2900 அதற்குண்டான 12A Toner 15 எண்ணிக்கை, Mouse 10எண்ணிக்கை,Dot Martix Printer 2 எண்ணிக்கை, அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சங்கத்தின் மூலம் வாங்கிக்கொள்ள அதற்கான தோராய செலவீனம் ரூ.2,00,000/-ற்கு மன்றம் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது
அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதி வழங்கலாம்.

30.ஆரணி நகராட்சி அலுவலகம் மற்றும் அதனை சுற்றி உள்ள வளாகத்தினுள் நடைபெறும் நிகழ்வுகளை கண்டறியவும், பாதுகாப்பு நலன் கருதியும் 6 எண்ணிகையிலான CCTV CABLE அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,000/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கும்,அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதி வழங்கலாம்.

31. இந்நகராட்சி 2020-2021-ன் ஆண்டின் பொது பிரிவு, வருவாய் பிரிவு,பொறியில் பிரிவு,பொது சுகாதார பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு தேவையான எழுதுப் பொருட்கள் A4 பேப்பர், லிகல் பேப்பர்,பதிவேடுகள் மற்றும் இதர பொருட்கள் பின்வருமாறு வாங்கவேண்டியுள்ளதால்

| | | |
|---|---|---|
| 1 | A4 பேப்பர் | 100 ரிம் |
| 2 | லிகல் பேப்பர் | 50 ரிம் |
| 3 | தன் பதிவேடுகள் | 50 |
| 4 | பகிர்மான பதிவேடுகள் | 15 |
| 5 | டெபாசிட் பதிவேடுகள் பக்கம் - 25 | 25 |
| 6 | டெபாசிட் பதிவேடுகள் பக்கம் - 50 | 25 |
| 7 | கார்பன் பேப்பர் | 2 பாக்கெட் |
| 8 | வருகை பதிவேடு நாட்குறிப்பு | 20 |
| 9 | தன் பதிவேடு நாட்குறிப்பு | 20 |
| 10 | Now Tax Chelan Register | 20 |

மேற்குறிப்பிட்டுள்ள அலுவலக பதிவேடுகள் பேப்பர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ( Tamilnadu Multipurpose Indco Services ,Trichy) என்ற நிறுவனத்தில் நேரடியாக வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3..00 இலட்சத்தின் மன்றத்தின் முன் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம்.2மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ள அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

32. இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணி மேற்கொள்ள அனைத்து தெருக்களிலும் பொதுமக்களுக்கு தினமும் விழிப்புணர்வு ஏற்ப்படுத்த நகராட்சியின் குப்பைகள் சேகரிக்கும் TATA Ace 2 வாகனங்களில் ஒலிப்பெருக்கிகள் ,கிருமி நாசினி தெளிக்கும் பணி மேற்க்கொள்ளப்படும் TATA Ace-ல் மைக்குடன் கூடிய ஒலிப்பெருக்கி மற்றும் ஆணையாளர் ஜீப்பில் மைக்குடன் கூடிய ஒலிப்பெருக்கி ஆகியவைகளை பொருத்தும் பணியினை அவசர அவசியம் கருதி பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ள இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் 31.03.2020-ன் குறிப்பில் தெரிவிக்கப்படுள்ளதிர்கிணங்க தோராய செலவின தொகை ரூ.45,000/-ற்கு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தனியார் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.765/2019/இ1)

தனி அலுவலர்
ஆரணி நகராட்சி